gistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 39—No. 1

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே'

மலர் 39 | விசுவாவசு தை ஜனவரி 1966 | இதழ்

உள்ளுறை | பக்கம்

சமாஜ வைர விழா ... 1
கா. இர... ன் செட்டியார் மறைவு ... 3
ஈடு செய்ய முடியாத இழப்பு ... 5
சிதம்பரத்தில் சமாஜ வைர விழா ... 8
வாழ்க கோவை கிழார் ... 16
இந்தியப் பிரதமர் சாஸ்திரி மறைவு ... 17
செய்திகள் ... 18
சமாஜ வைர விழா வரவேற்புரை—அனுபந்தம்
,, தலைமையுரை—அனுபந்தம்
,, ஆண்டறிக்கை—அனுபந்தம்

155317
R673m211,N28
31K6

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.
ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

திங்கள் தமிழ்த்தாள்

மலர் முப்பத்தொன்பது

1966

பத்திராசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர் : அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

12, கீழ மாட வீதி

மயிலாப்பூர் :: சென்னை-4

சமாஜப் பொதுக்கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் கிழமாட வீதியிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 24-12-66 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ ஆண்டு அறிக்கையையும் இவ்யாண்டு வரவு செலவுக் கணக்குகளையும் ஒப்புக்கொள்ள சமாஜப் பொதுக்கூட்டம் நிகழும். அக்கூட்டத்திற்கு உறுப்பினர் நிறைவெண் (Quorum) இல்லாவிட்டால் மேற்குறித்த பொருள்கள் பற்றி ஒப்புக்கொள்ள அவ்விடத்திலேயே மறுநாள் (25-12-66) ஞாயிற்றுக்கிழமை காலை அதே நேரத்தில் சமாஜ விதிகளின்படி வருபவர்களைக் கொண்டு அக்கூட்டம் நடத்தப்பெறும். பொது உறுப்பினர்கள் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

(செயலாளர்)

நம் சமாஜ உறுப்பினர்கள் திரு. ந. இரா. ஊரன் அவர்கள், (சமயபுரம் அஞ்சல், திருச்சி மாவட்டம்)

திரு. M. R. பாலகணபதி பி.ஏ., பி.டி., பீஜித்தீவு. ஆகிய இருவரும் ஆயுள் உறுப்பினரானார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்ற அன்பர்களும் இம்முறையைப் பின்பற்றுவார்களாக.

திருக்களிற்றுப் படியார் உரை	—அனுபூதி	1-50
திருவாசக ஆராய்ச்சிக் குறிப்புகள்		2-00
தத்துவப் பிரகாசம் மூலமும் உரையும்		8-00
சைவ சித்தாந்த சிறு நூல்கள் அட்டவணை		0-50

ஆகியவை சமாஜத்தில் கிடைக்கும்.

திருமணம்

நம் சமாஜப் பழம்பெரு உறுப்பினர் சிவஸ்ரீ கு. ப. ச. சுப்பராயன் அவர்களின் அருமைத் திருமகனார் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் குமாரி வள்ளியம்மை அவர்களுக்கும் 23-11-66 புதன்கிழமையன்று பேரூர் திருக்கோயிலில் திருமணம் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. புதுமணத் தம்பதிகள் எல்லா நற்பேறுகளும் பெற்று இனிதுற்று நீடுவாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் இணையடிகளை வணங்கி அருள் புரிய இறைஞ்சுகின்றோம்.

உள்ளுறை

பொருள்	கட்டுரையாளர்	பக்கஎண்
அடியார் பெருமை	அ. தா. ப. திருஞானசம்பந்தன்	231
அப்பர் கண்ட அம்மையப்பர்	G.M. முத்துசாமி பிள்ளை	106
அம்பிகைமாலை	மு. அ.	275
அருள்மொழியரசு வாழ்க	துணையாசிரியர்	248
அறுபத்து மூவர் வழிபாடு	ஆசிரியர்	61
ஆணவ நோய்க்கு ஓர் அருமருந்து	மு. திருஞான சம்பந்தப் பிள்ளை	207
ஆசியுரை	ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பண்டார சந்நிதி	31
இந்தியப் பிரதமர் சாஸ்திரி மறைவு	ஆசிரியர்	17
இயன்மொழி வாழ்த்து	பு. ர. சுவாமிநாதன் க. வெள்ளைவாரணன்	308
ஈடு செய்யமுடியாத இழப்பு	கொ. நீ. சிங்காரவேலு	5
எட்டாந்திருமுறை யாது?	க. சோமசுந்தரம் செட்டியார்	224
கல் ஒரு பிறவியா?	முரு. பழ. இரத்தினஞ் செட்டியார்	294
க. வஜ்ரவேலு முதலியார் அறுபதாண்டு நிறைவு	ஆசிரியர்	97
கா. இராமநாதன் செட்டியார் மறைவு	ஆசிரியர்	8
கா. ரா. கடைசி நாள்	பு. ர. சுவாமிநாதன்	43
குன்றக்குரவை கூறும் தமிழர் வழிபாடுகள்	பெ. கோவிந்தன்	113
சமயப்பிரசாரம்	துணையாசிரியர்	221
சமாஜச்செய்திகள்		53
சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்		51
சமாஜ வேண்டுகோள்	ஆசிரியர்	285
சமாஜ வைரவிழா	ஆசிரியர்	1
Do வரவேற்புரை அனுபந்தம்	R. கனகசபை M.P.	
Do தலைமையுரை	ஸ்ரீமுருக கிருபானந்தவாரியார்	
Do ஆண்டறிக்கை		
Do மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை	திருமதி. இராதா தியாகராசன்	

சிதம்பரத்தில் சமாஜ வைர விழா	G. கல்யாணம் M. A.	8
சித்தாந்த சாத்திரப் பாடக் கோடை வகுப்பு	செயலாளர்	124
சுடர்விட்டுளன் எங்கள் சோதி	ஆசிரியர்	125
சுந்தரமூர்த்தி நாயனார் மீது கீர்த்தனை	நல். மு.	50
சூரிய பூசை	தி. கி. நாராயணசாமி நாயுடு	240
செய்திகள்		18
சேலூர்	மு. அருணாசலம்	131
சைவஇளைஞர் சைவப்புலவர் மாநாட்டுத் தலைமையுரை (அனுபந்தம்)	பெ. திருஞானசம்பந்தன்	
சைவ சித்தாந்தம்	துணையாசிரியர்	157
சைவத் தேர்வு வினாக்கள்	அனுபந்தம்	
சைவப்புலவர் தேர்வு		35
சைவப் பெருமக்கள் கடமை	ஆசிரியர்	317
சைவம்	ஆசிரியர்	21
தக்களூர்	மு. அருணாசலம்	159
தமிழர் சைவ சமயம்	பெ. கோவிந்தன்	161
தமிழ்நாடு தெய்வீகப்பேரவை	ஆசிரியர்	170
தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் மணிவிழா	ஆசிரியர்	253
திரு. க. அ. முதலியார் அவர்களின் எண்பதாண்டு நிறைவு	ஆசிரியர்	256
திருக்களாஞ்சேரி	மு. அ.	65
திருச்சி மாவட்டத் தேவாரப் பதிக ஊர்கள்	தி.க. நாராயணசாமி நாயுடு	321
திருஞான சம்பந்தர் கூறும் தமிழர் சமயம்	பெ. கோவிந்தன்	269
திருத்தொண்டர்	சி. குமரேசப்பிள்ளை	77
திருமண வாழ்த்து		154
திருமந்திரம் அரியவுரை	அம்பைசங்கரனார்	118, 176, 244.
திருமூலரும் அசபாநிலையும்	சி. குமரேசப் பிள்ளை	135
திருமூலரும திருஞான சம்பந்தரும்	மா. வள்ளியம்மையார்	201
திருவலஞ்சுழி வெள்ளைப்பிள்ளையார் கோயில்	மு. அ.	290

திருவாசகம்—கல்லாய் மனிதராய்	ஆசிரியர்	189
திருவான்மியூர்	R. கோவிந்தராசன் B. A.	262
திருவான்மியூர்ச் சிவபெருமான் பதிகம்	தண்டபாணி சுவாமிகள்	87
தில்லைவிளாகம்	மு. அ.	103
தீர்மானங்கள்	செயலாளர்	31
நடராச தத்துவம்	க. வச்சிரவேலு முதலியார்	144
நீறுநிறைந்த நித்தியவழிபாடு	கோ. மு. முத்துசாமி பிள்ளை	70
நெஞ்சக்கனகல்	சா. சங்கரநாராயணன்	179
பட்டினத்தார் துறவு	R. பஞ்சநதம் பிள்ளை	24
பாராட்டுரை	வை. குஞ்சிதபாதம் பிள்ளை	90
பிரார்த்தனை	ஆசிரியர்	37
பிறர்பார்வையில் நம்சமயம்	கோ. நீ. சிங்காரவேலு	300, 326
பூரணலிங்கம் பிள்ளை	ஆசிரியர்	152
மதிப்புரை	அம்பை	33, 56, 185, 219, 251, 312
,,	ஆசிரியர்	34, 155, 217
,,	மு. அ.	252, 312
,,	நல், மு.	318
மாத விழாக்கள்—பஞ்சபர்வம்	தி. கி. நாராயணசாமி நாயுடு	47
முப்பது ஆண்டுகளுக்கு முன்	கோ. நீ. சிங்காரவேலு	120
வரவேற்புரை		28
வாழ்க கோவைகிழார்	அம்பை சங்கரனார்	16
வாலாஜாபாத் இந்துமத பாடசாலை பொன்விழா	துணையாசிரியர்	261
விநாயக தத்துவம்	கோ. மு. முத்துசாமி பிள்ளை	280
வேட்டுவ வரி கூறும் தமிழர் வழிபாடு	பெ. கோவிந்தன்	228
ஸ்ரீருத்ரம்	தி. கி. நாராயணசாமி நாயுடு	194

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 39 | விசுவாவசு தை 1966 ஜனவரி | இதழ் 1

சமாஜ வைரவிழா

(ஆசிரியர்)

சமாஜ அங்கத்தினர் பெருமைப் படத்தக்க வகையில் இவ்விழா தில்லையம் பதியில் நடைபெற்றது. விவரம் தனியே காணலாம். இதன் சிறப்புகளுக்கு வரவேற்புக் குழுவினர் பொறுப்புடையவர்கள். சிறப்பாக டாக்டர் கே. ரங்கசாமிப் பிள்ளை அவர்களும் தலைமை ஆசிரியர் பு. ர. சாமிநாதன் அவர்களும் வரவேற்புக் குழுவின் உயிர் நாடியாயிருந்து விழாவை நடத்தினார்கள்.

இந்த வைர விழாவின் சிறப்பியல்புகள் பல. சிலவற்றை இங்கே குறிப்பிடுதல் நலம். ஒன்று அன்பர்கள் தில்லைப்பதி, திருப்புலீச்சுரம், உமாபதீச்சுரம் ஆகிய இடங்களை வழிபடும் வாய்ப்புப் பெற்றார்கள்.

விழா மலர் வெளியிடுவதாகக் குறிப்பிட்ட ஏழு நூல்களில் திருவாசக மூலம் அச்சிட்டு முடியாமையால் வெளியாகவில்லை. மற்ற ஆறு நூல்கள் வெளியாயின. வழிபாட்டுத் துறையில் அனேக நூல்கள் சமாஜத் தலைவராகிய கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் எழுதி வெளியிடுவது மிகவும் பாராட்டு வதற்குரியது.

பல நாளாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை சமாஜம் வெளியிடு வதெனக் கொண்டிருந்த எண்ணம் இந்த விழாவில் கைகூடியிருக்கிறது. சமாஜத் துணைத் தலைவரான திரு நல். முருகேச முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு முதல் இதழ் எண்பது பக்கங்கள் உடையதாய் வெளியாயிற்று. முதல் இதழ் என்ற அளவில் குறுகிய காலத்தில் மிகவும் அழகுறச் செம்மையாய் இதனை ஆசிரியர் பதிப்பித்திருக்கிறார்.

இம்மகாநாடு சிறப்பான சொற்பொழிவுகளைப் பெற்றிருந்தது. மதுரை ஆலை அதிபர் திரு கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி இராதாதியாகராசன் அவர்கள் சைவ மங்கையர் மகாநாட்டில் தலைமை வகித்துச் சைவ சித்தாந்தத்தின் சாரமாக அரிய சொற்பொழிவு ஆற்றினார்கள். அவர்களுடைய பேச்சில் சைவ சமைய உண்மைகள் பற்றிய அழுத்தமான தோய்வும் பல சைவ நூல்கள் பற்றிய விரிவான அறிவும் அழகாகவும் நயமாகவும் எடுத்துரைக்கும் ஆற்றலும் வெளியாயின. எதிர்காலத்தில் சைவ சமூகம் எப்படி சமயத்துறையில் முன்னேற முடியும் என்பதற்கு அவர்கள் பேச்சு சிறந்த ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாயிருந்தது.

இளைஞர் மகாநாட்டில் இலங்கைச் சைவ இளைஞர் பலர், பொருட் கட்டுப்பாட்டுத் தொந்தரவு மிகுந்த இக்காலத்தில் வந்திருந்து நன்முறையில் பேசியதும் மற்றொரு சிறப்பு.

சமாஜத் தலைவர் சமாஜ விழாவில் தக்க ஆசிரியரைக் கொண்டு சிவதீட்சை செய்விக்க வேண்டும் என்று நெடுநாளாக அவாக் கொண்டிருந்தார். அது இம் மணிவிழாவில் நிறை வேறிற்று. 40 பேர் தீட்சை பெற்றனர். 6 பேர் விசேட தீட்சையும் 34 பேர் சமய தீட்சையும் பெற்றனர். கிரியா முறைகள் அனைத்தையும் சிறப்புற வுணர்ந்த சூரியனார் கோவிலாதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீ சிவாக்கிர யோகிகளாயிருந்த ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிக சுவாமிகள் நான்கு தினங்களில் குண்ட மண்டல மிட்டு ஹோமாதிக்கிரியா முறையாக ஞானவதியும் கலந்து, வடமொழி தென்மொழி மரபுகளைக் காட்டி தீட்சை செய்து உபதேசம் செய்தார்கள். இது சமாஜ விழாக்களில் ஏறக்குறைய என்றுமில்லாத ஒரு பெருஞ்சிறப்பு.

தலைவர் பேச்சு வழக்கம்போல் சர்வ ஜனரஞ்சகமாயிருந்தது என்பதோடு, எல்லாச் சொற்பொழிவுகளும் சிறப்புடையன. விசேடமாக திரு. வஜ்ரவேல் முதலியாரவர்கள் நடராஜ தத்துவம் பற்றிப் பேசிய இறுதிப் பேச்சு மிக்க மேலான நிலையில் கருதத்தக்க சைவ சாத்திரப் பிழிவாக இருந்தது.

கா. இராமநாதன் செட்டியார் மறைவு

(ஆசிரியர்)

சைவப் பேரன்பராகிய கா. ராமநாதன் செட்டியார் அவர்கள் மதுரையில் 4—1—66 காலை 4–30 மணிக்கு இவ்வுலகை நீத்தார்கள் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்,

செட்டியாரவர்கள் 1944 முதல் 46 வரை சைவ சித்தாந்த மகா சமாஜச் செயலாளராகப் பணி புரிந்தார்; பின்னர் 1963 ல் புதுச்சேரியில் நடந்த மகாநாட்டில் தலைமை வகித்தார்.

நகரத்தார் மரபிலுதித்த இப்பெரியார் B. A., B. L., பட்டம் பெற்று, சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராகப் பணிபுரிந்து வந்தார். அக்காலத்தில். அவரிடத்தில் எப்போதும் அமைதியும் தெய்வ உணர்ச்சியும் ஓங்கியிருந்தன. மயிலைத் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவி அதன் வாயிலாக திரு. வையாபுரிப் பிள்ளையவர்களைக் கொண்டு அரிய தமிழ் நூல்கள் பல வெளியிடச் செய்தார். அங்கு நவரச மகாநாடு என்ற சிறப்பான இலக்கிய மகாநாடு ஒன்று நடத்தினார். டி. கே. சிதம்பரநாத முதலியார் இலக்கியப் பிரசங்கம் செய்த இடங்களிலும், கே. பாலசுப்பிரமணிய ஐயர் கீதைப் பேருரை நிகழ்த்திய இடங்களிலும், அவரைத் தவறாது காணலாம். அக்காலத்திலேயே அவர், பேச்சில் ஆர்வம் குறைந்தவராயும் செயலிலே நாட்ட முடையவராயும் இருந்தார்.

பிற்காலத்தில் அவர் மலாயா சென்று அங்குள்ள மக்களிடையே வருமானத் துறையில் பேரறிஞராகப் பணி புரிந்தார். மலாயா சர்வகலாசாலை வளர்ச்சி பெறுவதற்கு எல்லா வகையிலும் உதவி செய்தார்.

திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அதுபற்றிய வாழ்க்கை விளக்கங்களை தர்மசக்கரம் என்ற பத்திரிகையில் எழுதிவந்தார்.

இவ்வாண்டு மீண்டும் மலாயா விலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார். சமாஜ விழாவில் அவர் கலந்து கொள்வதாகவும் இருந்தது. இதற்கு முன் டிசம்பர் 28 ஆம் தேதி சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் உயர் நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் கலந்து சொற்பொழிவு செய்த நேரம் பாரிசவாயு தாக்கச் செயலற்றுச் சாய்ந்தார். உடனேயே மதுரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று தக்க மருத்துவம் செய்தும் கூட, அவர் உடல் நலமடையாமல், காலமாகி விட்டார்.

நல்லொழுக்கத்திற்காகவே வாழ்ந்தவர் செட்டியார். நேர் முகமாக இந்தியாவிலும் மலாயாவிலும் அவரால் வாழ்க்கையில் வளம் பெற்றவர் எண்ணிறந்தோர். அவர் நாகரிகமே உருவானவர்; பண்பாட்டின் வடிவம். அமைதியான பேச்சும் எப்போதும் மாருத இன் சொல்லும், அன்பே வடிவாகவும் சீலமே நோன்பாகவும் உள்ள செட்டியாரவர்களைப்போல் மற்றோரைச் சொல்வது அரிது.

தம் தினசரி வாழ்க்கையில் கூட்டுப் பிரார்த்தனையை முக்கிய அங்கமாய்க் கொண்டிருந்தார். சூழ்ந்துள்ள அனைவரையும் அதிகாலையில் ஒன்று கூட்டி, 5-45 க்கு சமரசப் பிரார்த்தனை செய்வது அவருடைய வழக்கம். சமாஜம் இப்பொழுது வெளியிட்டிருக்கிற பிரார்த்தனைப் பாமாலையும் அவருடைய நூலை ஆதாரமாய்க் கொண்டது.

சமீபத்தில் சித்தாந்தம் பத்திரிகையில் வந்த திருவாசகப் பதிப்புப் பற்றிய கட்டுரையை வாசித்து, நமக்குப் பின்வருமாறு எழுதினார்! "புது தெல்லி முதலிய இடங்கள் சென்று இரு தினங்களுக்கு முன்னர் இங்கு வந்தேன். திரு சித்பவானந்தா அவர்களைப் பார்க்க 26—12—65 இங்கிருப்பேன். பின்னர் வரலாமா வென்ற எண்ணம்; உங்கள் வெளியீட்டு வேலைகள் நடந்து வருவது மகிழ்ச்சி. உங்கள் criticism உண்மையாயினும், வேண்டியதாயினும், இனிமையாக இருக்கலாமென்று தோற்றுகிறது. என் criticism அனுவசியமா? அன்பு ஏற்க. — கா. இராமநாதன் 23—12—65."

காலஞ் சென்ற பெரியாருடைய ஆன்மா சிவபெருமானுடைய திருவடி நிழலில் பேரானந்தப் பெருவாழ்வு பெறுக என்று எல்லாச் சைவ அன்பர்களோடு நாமும் வேண்டித் துதிக்கிறோம்.

ஈடு செய்ய முடியாத இழப்பு

கொ. நீ. சிங்காரவேலு.

சைவ சித்தாந்த மகா சமாஜப் புத்தாண்டு சோகத்தில் தொடங்குகின்றது. சமாஜத்தின் பெருந் தலைவர்களில் ஒருவரான மலேயா திரு K. இராமநாதன் செட்டியார், பி.ஏ., பி.எல்., அவர்கள், 4—1—66 காலை 4-30 மணிக்கு மதுரையில் சிவனடி சேர்ந்தார். இந்தத் தேதிக்குச் சரியாக ஒரு மாதத்திற்கு முன்னர்தான் தாய்நாட்டில் உயிர் நீப்பதற்கென்றே போலும் மலேயாவிலிருந்து தில்லி வந்து சேர்ந்தார். சென்ற மாதம் தில்லியில் நடந்த அகில உலக இந்து சமய மாநாட்டிற்கு மலேயா நாட்டுப் பிரதிநிதியாக சில நண்பர்களுடன் வந்து அம்மாநாட்டில் கலந்து கொண்டார்: அங்கிருந்து, ரிஷிகேசம், காசி முதலிய இடங்களைத் தெரிசித்து பெங்களூரில் வாரக் கூட்டு வழிபாட்டுத் தொடக்க விழாவில் கலந்து கொண்டு பேசினார். இவர் இந்தியா வருவது தெரிந்து, முன்னரே நம் சமாஜ வைர விழாவில், வைர விழா மலர் வெளியிட அவரை அழைத்திருந்தோம். அதற்கிணங்கி இவர் பெங்களூரிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். சென்னையில், புரசை சர் எம். சி. டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் திரு கிருதாரிப் பிரசாத் சொற்பொழிவு வரிசையைத் தொடக்கிவைத்தார். அந்தர்யோகம் நடத்துவதற்குச் சென்னை வந்திருந்த தவத் திரு சித்பவானந்த சுவாமியுடன் ஒருநாள் முழுவதும் தங்கியிருந்தார். பின்னர் சமாஜ வைர விழாவில் கலந்துகொள்ள மூன்று நாள் முன்னதாகவே சிதம்பரம் சென்று 23—12—65-ல் நடந்த இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் பொன் விழாவில் கலந்துகொண்டு, திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் பேசிக் கொண்டிருக்கும் போது பெரிய கூட்டத்தின் முன்னிலையிலேயே சுகவீனமடைந்தார். காரணம், 'காரனரி த்ரோம்போஸிஸ்' என்ற நோய் என்று சொல்லப்பட்டது. மதுரையில் உயிர் நீத்தார்

இவர் சிறந்த மனிதர். சமயப் பணியையே வாழ்க்கையின் பண்பும் பயனுமாகக் கருதியவர். தன் முனைப்பின்றிச் சேவை புரிபவர். இவர் இருந்த இடமெல்லாம் சிவம் மணக்கும். சொல்லியபடி செய்பவர். தாம் செய்வதையே சொல்பவர். பேச்சு ஆணித்தரமாகயிருக்கும். வீண் சொல் ஆரவாரம் இருக்காது. அவர் பேச்சில் புதிய கருத்துக்கள் இருக்கும்; அல்லது பழைய கருத்துக்கள் புதிய ஆடையில் தோன்றும். நடைமுறைக்கு ஒத்ததாகயிருக்கும். அவர் பேச்சில் ஏட்டுச் சுரைக்காய்க்கே இடமில்லை.

இவர் மலாய் நாட்டுத் தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். அங்குச் சில காலம் வழக்கறிஞராகவும் அரசியல் தலைவராகவும், கோலாலம்பூர் சட்டசபை உறுப்பினராகவும் பணி புரிந்தவர். பின் அரசியல் வாழ்க்கையை விட்டுச் சமயப் பணியே பணியாக் கொண்டார். காலைக் கூட்டு வழிபாடு என்ற முறையை மலேயாவில் பரப்பினர். சில மாதங்களுக்கொருமுறை மலேயாவில் பற்பல இடங்களில் அந்தர் யோகம் நடத்திச் சமய உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டினர். அவர் நடத்தும் அந்தர் யோகமே தனிச் சிறப்புடைத்து. இரண்டு மூன்று நாள் இராப் பகல் நாம் எப்போதும் இறைவனையே சிந்திக்கச் செய்வார். இவ்வந்தர் யோகத்தில் கலந்த ஒவ்வொருவரும் முக்கியப் பங்கு கொண்டதாக மன நிறைவு கொள்வர். இதில் அவர், தம் தலைமை தோன்ருது தலைமை தாங்குவார்.

இவர் இந்தியாவில் இருந்தபோதும் மலேயாவில் இருந்தபோதும். சமாஜத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தார். 1944–46-ல் சமாஜச் செயலாளராகப் பணியாற்றினர். 1944-ல் பள்ளத்தூரில் சமாஜ ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடத்தித் தந்தார். 1963-ல் மலேயாவில் சமாஜச் சிறப்பு மாநாடு கூட்டினர். அதே

ஆண்டு புதுவையில் கூடிய சமாஜ ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

இவர் வெளிநாடுகளில் பலயிடங்களுக்குச் சென்று சைவத்தின் பெருமையை விளக்கியுள்ளார். இலங்கைக்குப் பலமுறை சென்றுள்ளார். 1964-ல் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்த ஆசிய கிருத்தவ இளைஞர் மாநாட்டில் இந்து சமயப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு ஆங்கிலச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். தாய்லாந்தில் சில சீனர்களைக் கூட்டி ஆங்கிலத்தில் அந்தர் யோகம் நடத்தியதாகச் சொன்னார். சமாஜப் பிரதிநிதிகள், பர்மா, தெற்கு ஆப்ரிகா முதலிய நாடுகளுக்கும் சென்று சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்பவேண்டும் என்று சொல்லுவார். அவர் உள்ளுவதெல்லாம் உயர்ந்தவை. உள்ளுவதையடைய வழியையும் வகுத்துக் கொடுப்பார்.

இவர், 'ஏன் பிறந்தோம்' 'சைவத்தின் சிறப்பு' 'வாழ்க்கையும் சமயமும்' 'ஆழமும் அகலமும்' 'ஞானச் செய்தி' 'பார்ப்பது எது?' 'மலேயா இந்தியா யாத்திரை' 'வேலன் விளையாட்டு' முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார். இவருடைய இஷ்ட மூர்த்தி முருகன் என்று ஊகிக்க இடமுண்டு.

இவர் மறைவு சமாசத்திற்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம். மலேயா நாட்டுத் தமிழ் மக்களின் நஷ்டத்தை என் சொல்வது? அவர் குடும்பத்தாருக்கு சமாஜத்தின் அநுதாபம் உரித்தாகுக. அவர் ஆன்மா சாந்தம் அடைய இறைவன் அருள் பாலிப்பாராக!

—★—

சிதம்பரத்தில் சமாஜ வைர விழா

[G. கலியாணம் M.A.]

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே "

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் தமிழ் நாட்டைக் குறிக்கப்போந்த சேக்கிழார் பெருமான் "மாதவம் செய்த தென்திசை" என்று போற்றிப் புகழ்ந்தனர். அத்தகு சீர்த்தமிழ்த் திருநாட்டின் ஒரு பகுதியாகிய தென் ஆர்க்காடு மாவட்டம் " அறந்தருநாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருளும் " பேறுபெற்றது. சைவசித்தாந்தத்தலைமணி நூலாம் சிவஞானபோதத்தை உலகுக்கருளிய 'பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய் கண்டநாதனை' ஈன்றெடுக்கும் தவம்செய்தது. அம்மட்டோ ! தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், மெய்ப் பொருளார். திருநீலகண்டயாழ்ப்பாணர், திலகவதியார், கணம்புல்லர், கலிக்கம்பர், சடையனார், இசைஞானியார், நரசிங்கமுனையரையர், நம்பியாண்டார்நம்பி, அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியார், இராமலிங்கர் போன்ற பல மெய்யடியார்களைத் தோற்றுவித்த பெருமையுடையது. ஒன்றுமாய் எந்தையுமாய் உடன்தோன்றினராய்த் தன் அடியோங்களுக்குத் தோன்றாத்துணையாய் நின்றருளும் திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமான் திருமுன்னருள்ள ஸ்ரீலஸ்ரீஞானியார்சுவாமிகள் மடாலயத்தில் 1905–ஆம் ஆண்டு சைவசித்தாந்த மகா சமாஜம் தோன்றியது. கோயில் என்ற பொதுப் பெயரையே சிறப்புப் பெயராகக் கொண்ட சிதம்பரத்தில் சமாஜத்தின் முதல் இரண்டு ஆண்டுவிழாக்கள் நடந்தன. 1955–ல் பொன்விழாவும் அப்பதியின்கண்ணே நிகழ்ந்தது. மீண்டும் சமாஜத்தின் 60–ஆம் ஆண்டு நிறைவு விழா ஆகிய வைரவிழா 31-12-65, 1-1-66 2-1-66 இந்த மூன்று நாட்களிலும் அத் திருத்தலத்திலேயே நடைபெற்றது.

முதல் நாள்

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் இலங்கை, மலேயா முதலிய நாடுகளிலிருந்தும் விழாவிற்கு வந்திருந்த சைவ மெய்யன்பர்கள் அதிகாலையில்

தில்லையில் எல்லையில் தனிக்கூத்தியற்றும் எம்பெருமானை வழிபட்டு மாறிலா மகிழ்ச்சியில் திளைத்தனர். ஆண்டு விழா வெளியீட்டு நூல்களும் அம்பலவாணரின் பொற் பாதங்களில் வைத்துப் புனிதமாக்கப் பெற்றன. எல்லோரும் திருவெம்பாவைப் பாடலை ஓதினர். கோயிலி லிருந்து மாநாட்டுப் பந்தலுக்குத் தலைவர்கள் முதலிய வர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெற்றனர். அன்பர்கள் திருமுறைப்பாராயணம் செய்ய, மௌனவாத் தியம் முழங்க, விருதுகள் முன்செல்ல ஊர்வலம் சென்றது. வழி நெடுகிலும் தோரணங்களும், விழாத் தலைவர்களை வருக என்றழைக்கும் வளைவுகளும் காட்சியளித்தன. ஊர்வலம் மாநாட்டுப்பந்தர் அமைந்திருக்கும் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியை அடைந்ததும் அர நாம முழக்கம் எழுந்தது. தென்ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் திரு. டி. வி. வாசுதேவன் ஐ. ஏ. எஸ். அவர்கள் மாநாட்டுப்பந்தர் முன் இடபக் கொடியை ஏற்றி வைத் தார்கள். மாநாட்டுப்பந்தர் மிக அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மேடைமீது ஒருபுறம் சிவகாமசுந்தரி உடன்கூடிய கூத்தப்பெருமானின் திருவுருவம் பச்சை வண்ணப் பின்னணியோடு மின் விளக்குகளுடன் காட்சி யளித்தது. மற்றொரு பக்கம் சிவலிங்கப் பெருமானும் நந்தியும் வாடாத மலர் மாலையுடன் அணிபெறத் திகழ்ந் தனர். தலைவர்கள், வரவேற்புக்குழுவினர் முதலியோர் மேடைமீதமர்ந்தனர். இறை வணக்கத்துடன் காலை 9 மணிக்கு மாநாடு தொடங்கியது.

அருள்மொழி அரசு - திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். வரவேற்புக் குழுத் தலைவர் திரு. ஆர். கனகசபை எம். பி. அவர்கள் முதலில் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். (அதை வேறிடத் தில் காண்க). பின்னர் தென்ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் திரு. டி. வி. வாசுதேவன் ஐ ஏ. எஸ் அவர்கள் தமது கொடியேற்றுரையை ஆற்றினார்கள். சமாஜச் செயலாளர் திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார் எம். ஏ. அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார்கள். (அதைப் பிறிதோர் இடத்தில் காண்க.) குடியரசுத் தலைவர், தமிழக ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர் திரு.

மன்றுடியார், தருமை ஆதீனத்தலைவர், மதுரை ஆதீனத் தலைவர் முதலியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பெற்றன. தமிழ்நாடு சட்டசபைத் தலைவர் திரு. எஸ். செல்லப்பாண்டியன் பி. ஏ., பி. எல்., அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார்கள். வித்துவான் திரு. அம்பை சங்கரனார் அவர்கள் மாநாட்டுத் தலைவர்களுக்கு வரவேற்பிதழை வாசித்தளித்தார்கள். டாக்டர் திரு கே. அரங்கசாமிப் பிள்ளை எம்.பி. பி.எஸ்., அவர்கள் வைர விழா மலரை வெளியிட்டு அதில் அடங்கியுள்ள கட்டுரைகளின் சிறப்புக்களை எடுத்தியம்பினார்கள். பின்னர், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் இயற்றிய "சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல" என்ற நூலையும், திரு. கௌரிமுத்துக் குமாரசாமி நாயனார் அவர்கள் பொருளுதவியுடன் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்கள் எழுதிய "முருக வழிபாடு" என்ற நூலையும், திரு. கோ. நீ. சிங்காரவேலு எம். ஏ., அவர்கள் பதிப்பித்த 'கூட்டு வழி பாட்டுப் பாமாலை" என்னும் நூலையும் சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் சமாஜ வெளியீடுகளாக வெளியிட்டார்கள். மேலும், திரு. மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள் பழைய உரையுடன் பதிப்பித்த 'தத்துவப்பிரகாசம்' என்னும் நூலையும் அவர்களே எழுதிய "திருவாசகக் குறிப்புகள்" என்ற கட்டுரைத்தொகுதியையும், வித்துவான் திரு. க. வெள்ளை வாரணார் அவர்கள் நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன் பதிப்பித்த "திரு அருட்பயன்" என்னும் நூலையும் திரு. மு. அருணாசலம் அவர்கள் அவைகளின் சிறப்புக்களைக் கூறி சமாஜவெளியீடுகளாக வெளியிட்டார்கள். சென்னை இந்து சமய அறக்கட்டளை ஆட்சித்துறை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி எல். அவர்கள் சமாஜ முத்திங்கள் ஆங்கில வெளியீடான "சைவசித்தாந்தம்" என்னும் இதழை வெளியிட்டு அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். அருள்மொழி அரசு—திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். (இவ்விதழில் வேறிடத்தில் காண்க.) அவர்கள், "அப்பன் நீ அம்மை நீ" என்று தொடங்கும் அப்பர் சுவாமிகளின் பாடலை எடுத்துக்கொண்டு அதற்குப்

புத்துரையொன்று பொருந்தக் கூறினார்கள். "இப் பொன் நீ" என்பது 1955-ல் சிதம்பரத்தில் சமாஜப் பொன் விழா நிகழ்ந்ததையும், "இம்மணி நீ" என்பது நடந்துகொண்டிருக்கும் மணி(வைர)விழாவையும் குறிக்கும் என்று கூறி, "இம்முத்து நீ" என்பதால் சமாஜ முத்து விழாவும் சிதம்பரத்திலே திருவருளால் நடைபெறும் என் பதைக் குறிக்கும் என்று சொல்லி அப் பேரவையினரை மகிழ்வித்தார்கள். சிவன் சீவன் என்ற இரு பொருள்கள் பற்றிய சித்தாந்தக் கருத்துக்களை அவருக்கேயுரிய நகைச் சுவையுடன் மருந்தைச் சர்க்கரையுடன் குழைத்துக் கொடுப்பதுபோன்று எளியமுறையில் தெளிவுபெற எடுத் துச்சொன்னார்கள். முற்பகல் நிகழ்ச்சி 1 மணிக்கு முடி வுற்றது.

அன்று பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் மாநாடு கூடியது. இறைவணக்கம், தலைவர் முன்னுரையின் பின், குடந்தை திரு. பி. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் "தேவாரப் பண்" பற்றியும், திருவதிகை திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் "உறுதி" என்ற பொருள்பற்றியும், காஞ்சிபுரம் வித்வான் திரு ஜயசெந்தில்நாத முதலியார் அவர்கள் "நிறைபெருங் கருணை" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். தலைவர் அவர்கள் "அன்பும் அறிவும்" என்ற பொருள்பற்றி இரத்தினச் சுருக்கமாகப் பேசி அவையோரை ஆனந்தக் கடலுள் ஆழ்த்தினார்கள். கடவுள் வாழ்த்துடன் இரவு 8 மணிக்கு முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிது முடிந்தன.

இரண்டாம் நாள்

1-1-1966 சனிக்கிழமை காலையில் மாநாட்டிற்கு வந்திருந்தோர் இளமையாக்கினார் கோயிலில் வழிபாடு செய்தனர். 9 மணிக்கு, சைவ மங்கையர் மாநாடு தொடங் கியது. சென்னை டாக்டர் திரு இரத்தினவேலுசுப்பிரமணியம் (B. Sc., M. D., M. R. C. P. London) அவர்கள் தொடக்க வுரை நிகழ்த்தினார்கள். ஆலை அதிபர் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி. இராதாதியாகராசன் B. Sc. அவர்கள் தலைமைதாங்கினார்கள். அவர்கள் தலைமையுரையில் சைவம் என்னும் பொருள் பற்றிப் பேசும்போது திருமூலர் அருளிய "சைவம் சிவத் துடன் சம்பந்தமாவது" என்று தொடங்கும் ஒரு பாடலை

எடுத்துக்கொண்டு அதில் கண்ட நான்கு வகைகளையும் முறைப்படுத்தி சாத்திர தோத்திர மேற்கோள்களுடன் மிகத்தெளிவாக விளக்கிப் பேசினார்கள். இதுவரையில் நடந்த மங்கையர் மாநாடுகளில் இத்தகைய தலைமையுரையைத்தாங்கள் கேட்டதில்லை என்று அவையிலிருந்த பெரியோர் பாராட்டிப் பேசினர். இந்தத் தலைமையுரையின் தன்மையை அடுத்தமாத இதழில் அனுபந்தமாக வெளிவருவதினின்றும் உணர்ந்து கொள்ளலாம். பின்னர் சென்னை திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்கள் "பெரிய புராணப் பெண்மணிகள்" என்னும் பொருள் பற்றியும், இலங்கை சைவப்புலவர்-பண்டிதை திருமதி. தங்கம்மா அப்பாகுட்டி அவர்கள் "மணிவாசகரின் ஞான உள்ளம்" என்ற தலைப்பிலும், நாவலர்-பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் திருமகளார் வித்துவான் திருமதி. சிவபார்வதி அம்மையார் அவர்கள் "திருஞானசம்பந்தர்" என்பதுபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். மாநாட்டுத்தலைவியார் அவர்கள் அவ்வப்போது சீரிய கருத்துக்களைக்கூறி தமது முடிப்புரையில் சைவ மங்கையர் மாநாட்டிற்கென ஒரு முழு நாளைக் கொடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள். பிற்பகல் 2 மணிக்குச் சைவ மங்கையர் மாநாடு கடவுள் வாழ்த்துடன் இனிது நிறைவேறியது.

பிற்பகல் 3 மணிக்குச் சமாஜ உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். 4 மணிக்குச் சைவர் மாநாடு திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் தொடங்கியது. இறைவணக்கத்தின் பின் தலைவர் அவர்கள் தங்களுடைய முன்னுரையைக் கூறினார்கள். தூத்துக்குடி திருமுறைச் செல்வர், சித்தாந்த தினகரன் வித்துவான் திரு மறை திருநாவுக்கரசு அவர்கள் "பேரின்பம் பெற்ற பெருந்தகையார்" என்பது பற்றியும், பேராசிரியர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம்.ஏ., பி.எல்., எம். ஓ. எல்., அவர்கள் (மதுரைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றிருக்கும் பேரறிஞர்), '12-ஆம் சூத்திரத்திற்குத் தற்காலத்திற்குரிய விளக்கம்" என்னும் பொருள்பற்றியும், திரு. ந. ரா. முருகவேள் எம், ஏ., எம். ஓ. எல், அவர்கள் "உமாபதி

சிவம்'' என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் செய்தார்கள். திரு. வாரியார் அவர்கள் சமாஜம் நடாத்தும் சைவப் புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளில் வெற்றிபெற்ற வர்களுக்குப் பட்டங்களும் பரிசுகளும் வழங்கித் தமது முடிப்புரையுடன் விடைபெற்றுச் சென்றார்கள். இரவு 8 மணிக்கு இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மூன்றாம் நாள்

2-1-66 ஞாயிற்றுக்கிழமை காலையில் மாநாட்டிற்கு வந்திருந்தோர் திருமுறைப் பாராயணம் செய்துகொண்டு நடந்து கொற்றவன் குடியிலுள்ள உமாபதிசிவாசாரியார் கோயிலுக்குச் சென்றனர். அவ்வூர் மக்களும், கோயில் நிர்வாகிகளும் எதிர்வந்து வரவேற்றனர். இரு கூட்டங் களும் கைகூப்பி வணங்கியது சேக்கிழார் பெருமான் அடி யார்கூட்டங்கள் சந்திக்கும் போது சொல்லியுள்ள காட்சி களை நினைவுக்குக் கொண்டுவந்தது. உமாபதிசிவனார் கோயில், பெற்றான் சாம்பான் சமாதிநிலை முதலியவற்றில் வழிபாடு நிகழ்ந்தது. திரு. நல். முருகேசமுதலியார் அவர் களும், திரு. ஜே. எம். சோதசுந்தரம் பிள்ளை அவர்களும் உமாபதி சிவத்தின் வரலாற்றையும், அவர் அருளிய நூல் களைப்பற்றியும் பேசினார்கள். சர்க்கரை அன்னம், சுண் டல், பழம் முதலியவற்றை வந்திருந்தோர் அனைவருக்கும் படைத்து உபசரித்தனர். அக்கோயில் நிர்வாகிகளுக்கு மாநாட்டினரின் நன்றி உரியதாகும்.

மாநாட்டுப்பந்தரில் காலை 9 மணிக்கு சென்னை மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் திரு பெ. திருஞான சம்பந்தம் பிள்ளை எம். ஏ., எல். டி., அவர்களின் தலைமையில் சைவ இளைஞர் மாநாடும், சைவப் புலவர் மாநாடும் தொடங்கியது. இறைவணக்கத்தின் பின்னர் தலைவர் அவர்கள் தமது தலைமையுரையை நிகழ்த்தினார்கள். (அதை அடுத்தமாத இதழில் காண்க.) பின்னர் கீழ்க் காணும் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன :-

தாம்பரம் திரு க. வடிவேலாயுதம் எம். ஏ. அவர்கள்
—'' திருமுறைப் பெருமை''

இலங்கை சைவப்புலவர், வித்துவான் திரு. வ. வ. செல்லையா அவர்கள்.
—''கந்தபுராணக் கலாச்சாரம்''

சிதம்பரம் சித்தாந்தப் புலவர் வித்துவான் திரு. கு. திருநாவுக்கரசு அவர்கள். —"சிறிய பெருந்தகையார்"

இலங்கைப்புரவலர் திரு. இ. வயித்தியலிங்கம் B. Sc. (Eng) அவர்கள்.—"அவனன்றி ஓரணுவும் அசையாது"

இலங்கை சைவப்புலவர் பண்டித திரு. த. கிருஷ்ண பிள்ளையவர்கள். —"சேக்கிழார் தந்த செல்வம்"

இலங்கை சைவப்புலவர் திரு. மு திருஞானசம்பந்தம் பிள்ளையவர்கள். —"வெளிநாடுகளில் சைவம்"

தலைவர் அவர்களின் கருத்துரையின் பின் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் 1 மணிக்கு முடிவுற்றது.

மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் நடந்தது சமாஜ அலுவலர் தேர்தல், தீர்மானங்கள் நிறைவேற்றல் முதலியன நிகழ்ந்தன. மாலை 4 மணிக்குச் சைவர் மாநாடு திரு. கோ. மு. முத்து சாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் கூடியது. சென்னை திரு. திருப்புகழ் மணி அவர்கள் "குஞ்சிப்பூ" என்பதுபற்றியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் "ஏகனாகி இறைபணி நிற்றல்" என்னும் பொருள்பற்றியும், காஞ்சிபுரம் சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேலு முதலியார் பி. ஏ. எல். டி. அவர்கள் "மூவரும் முதல்வன் கூத்தும்" என்ற பொருள்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் அவர்கள் முடிப்புரை கூறினார்கள். சமாஜச்சார்பில் திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார் எம்.ஏ. அவர்களும், வரவேற்புக் குழு சார்பில் திரு. பு ர. சுவாமிநாதன் எம். ஏ, எல். டி, அவர்களும் எல்லோருக்கும் நன்றுகூறினார்கள். இரவு 8 மணிக்கு மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் இனிது நிறை வேறின.

1955-ல் நடந்த பொன்விழாவை இரண்டு இரத்தினங்கள் நடத்தித் தந்தன—ஆடூர் எம். இரத்தினசபாபதிப் பிள்ளை யவர்கள், சிதம்பரம் திரு. எஸ். இரத்தினசாமிசெட்டியார் அவர்கள். இப்போது நடந்த மணிவிழாவின் வரவேற்புக் குழுத் தலைவர், முன்னவரின் திருமகனாரான திரு ஆர். கனகசபை, எம். பி. அவர்களே. திரு எஸ். இரத்தினசாமி செட்டியார் அவர்கள் தங்களுடைய பெரிய கட்டிடத்தில் உணவளிப்பதற்கு வேண்டிய வசதி செய் தளித்தார்கள். இவர்களுக்குப் பெருந்துணையா யிருந்து

அருந்தொண்டாற்றியவர்கள் டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளையவர்களும், திரு என். எம். பொன்னம்பலம்பிள்ளை அவர்களும் ஆவர். மற்றும் வரவேற்புக் குழுவின் மற்றைய அங்கத்தினர்களும் சிறந்த பணிபுரிந்தார்கள். தலைமை ஆசிரியர் திரு. பு. ர. சுவாமிநாதன் அவர்களும், அவர்களின்கீழ் ஆசிரியர்களாயுள்ளவர்களும், பணியாளர்களும், மாணவர்களும் நல்ல சேவைசெய்தார்கள். அவற்றை மறக்கமுடியாது. மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவருக்கும் மாணவர் விடுதியில் இடம் அமைத்துக் கொடுத்திருந்தார்கள். மூன்று நாட்களிலும் அறுசுவை உண்டியும், இன்பண்டங்களோடு கூடிய சிற்றுண்டியும், குளிப்பதற்கு வெந்நீர் முதலியனவும் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது பெருமகிழ்ச்சிக்குரியதாகும். சமாஜத்தாரும், வரவேற்புக்குழுவினரும் மாநாட்டிற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தமைத்ததற்காக மாநாட்டிற்கு வந்திருந்தோரின் நன்றி உரியதாகும்.

இந்த ஆண்டு மாநாட்டில் இரண்டு சிறந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. ஒன்று, சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிகர் அவர்கள் நாற்பது பேர்களுக்குச் சமய தீட்சையும், சிவபூசையும் செய்துவைத்தார்கள். மற்றொன்று, இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் ஏற்பாடு செய்த பொருட்காட்சியாகும். தென்ஆர்க்காடு மெய்யடியார்கள் பற்றிய பகுதி மிகச்சிறப்பாய் அமைந்திருந்தது. திருப்பாதிரிப்புலியூர்க் கோயில்முன் அப்பர் சுவாமிகள் நின்ற காட்சியும், இளமையாக்கினார்குளத்தில் திருநீலகண்டரும் அவர் மனைவியாரும் இளமை பெற்ற நிகழ்ச்சியும் உயிரோவியங்களாகத் திகழ்ந்தன. வடலூர் சபை கண்கவர் வனப்பினதாகக் காட்சி நல்கியது. பொதுவாக, இந்த ஆண்டு தில்லையில் நடைபெற்ற வைரவிழா எல்லா வகையிலும் சிறந்து நடந்தது என்பது எல்லோருடைய ஒருமனதான கருத்து. இவற்றை நடத்திவைத்த அனைவருக்கும் வந்திருந்தோர் அனைவரும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையவர். எல்லாவற்றிற்கும் மேலாக மாநாடு நல்லமுறையில் நடந்தேற தில்லைக்கூத்தன் திருவருள் பாலித்ததற்கு அவன் திருவடிகளை வாழ்த்தி வந்தித்து வழிபடுவோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

வாழ்க கோவைகிழார்

(அம்பை சங்கரனார்)

நம் சமாஜப் பழம்பெருந் தலைவர்கள் பலருள் ஒருவர் கோவை கிழார், மருதன், இராமச்சந்திரன், செந்தமிழ்ப் புரவலர், சித்தாந்தப் புரவலர், சைவ ஞாயிறு, முன்னாள் அறநிலையத்துறை ஆணையர், பேரூர் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர், "சித்தாந்தம்" "கொங்கு மலர்" முன்னாள் ஆசிரியர், ஆராய்ச்சியறிஞர், சிறந்த நூலாசிரியர் எனும் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ள இராவ்பகதூர் C. M இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B.A., B.L., F. R. S. S ஆவர். அவர்களுக்கு 22-12-65 அன்று 77-ஆண்டுகள் நிரம்பி 78-ஆவது ஆண்டு தொடங்குகிறது எனத் தெரிந்து மிக மகிழ்வெய்துகின்றோம். அவர்கள் ஆட்சி பீடத்திலிருந்த ஞான்று நம் சமாஜத்திற்குச் செய்த தொண்டுகள் அளப்பில.

சிலர் அதிகாரத்திலிருக்கும் பொழுது சமய முன்னேற்றப் பணி பற்றிக் கருதாராய்த் தங்கள் அலுவல்களுக்கிடையூறு நேருமோவென ஐயுறுகின்றனர். சமயப் பணி தங்களின் உரிமைப் பணி என்பதில் யாதும் ஐயமின்று. ஆகவே எந்நிலையிலிருக்கினும் அவரவர் சமயப் பணிகளைச் செய்வதில் சற்றும் மனத்தயக்கம் வேண்டுவதின்று. அவ்வாறு தயங்காது சமயப்பணி ஆற்றியவர்களுள் தலையாயவர் நம் செட்டியார் அவர்கள் என்றால் அது சிறிதும் முகமனாகாது. எனக்கும் சமாஜத்துக்கும் தொடர்பு திருமயிலத்தில் 1940 ஆம் ஆண்டு நடந்த சமாஜ ஆண்டுவிழா முதலேயாகும். அவ்வாண்டுவிழாவில் அவர்கள் அதிகார பீடத்திலிருந்ததால் எல்லா சைவாதீனங்களின் பிரதிநிதிகளையும் வரவழைத்திருந்தார்கள். பல பெருந் திருக்கோயில்களின் அலுவலர்களையும் வருமாறு ஆணையிட்டு அழைத்தார்கள். அம் மாநாட்டுக் காட்சியே என் உள்ளக் கிழியில் என்றும் நின்று இன்பம் தந்து கொண்டிருக்கின்றது. இதனைப் போன்று அவர்கள் செய்த அரும்பெருஞ் சமயப் பணிகள் அளவிட்டுரைக்கவொண்ணா. திருக்கோயில்கள் தோறும் சமயப் பாடல்களை எழுதச் செய்தது, திருக்கோயில்களின் வரலாறுகளை எழுதி வெளியிடச் செய்தது, அவ்வக் கோயில்கள் பற்றிய நூல்களை வெளியிடுமாறு ஊக்கியது முதலிய பல அருஞ் செயல்களைச் செய்த தீரர் அவரே.

வாழ்வாகும். ஆகவே அத்தகைய பெரியார் இன்னும் இந்நிலவுலகில் பல்லாண்டு வாழ்ந்து நம் போலியர்க்குத் தங்கள் பொன்னும் அறிவு அனுபவ, ஆசியுரைகளைத் தந்து நம் சமயஞ் சிறக்க ஆம் தொண்டுகளையாற்ற நீல மேனி வாலிழை பாகத்தொருவன் அருள் சுரப்பானாக.

வாழ்க கோவை கிழார்.

இந்தியப் பிரதமர் சாஸ்திரி மறைவு!

(ஆசிரியர்)

ருஷ்ய நாட்டில் உள்ள டாஷ்கெண்ட் நகரில் அந்நாட்டுப் பிரதமர் கோசிஜின் ஏற்பாடு செய்திருந்த இந்தியப் பாகிஸ்தான் சமரசப் பேச்சுக்குச் சென்ற இந்தியப் பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி 11-1-66 காலை 1-32 மணிக்கு டாஷ்கெண்டிலேயே மார்படைப்பால் காலமானார் என்ற செய்தியைக் கேட்டு இந்திய நாடு பெரும் துக்கத்துக்குள்ளாகியிருக்கிறது, 1964 மே மாதம் நேரு இறந்தபோது இவர் பிரதம மந்திரியானார். 19 மாதமே பதவியில் இருந்திருக்கிறார். பாகிஸ்தான் போர் ஆகிய மிகப் பெரிய பிரச்சினையை இவர் சமாளிக்க வேண்டியிருந்தது. பகட்டான உருவமில்லாவிட்டாலும், அடக்கமான முறையில் மிகவும் உறுதியாக அப் பிரச்சினையை இவர் சமாளித்தமை இந்நாட்டுக்குப் பெருமை தருவதாயுள்ளது. நேருவுக்குப் பிறகு யாரும் பேர் சொல்ல முடியாது என்று இருந்த அரசியல் நிலையை இவர் தமது உறுதியாலும் அடக்கத்தாலும் பெருமை தரத்தக்க விதமாகச் சமாளித்தார். பேச்சில் விருப்பமின்றி, எங்கும் செயலையே பிரதானமாய்க் கருதி வந்தார். பேச்சிலும் நடத்தையிலும் மிக்க நிதானமுடையவர். கூர்ந்த பகுத்தறிவுடன் பிரச்சினைகளைக் கண்ணியமாகவும் உறுதியாகவும் சமாளித்து வந்தார். டாஷ்கெண்ட் மகாநாட்டில் நன்முடிவு ஏற்படாதோ என்றிருந்த நிலையை மிக்க விவேகத்தோடு மாற்றியமைக்கவும் இவர் காரணமாயிருந்தார்.

வடமொழிப் பாண்டித்தியத்தால் சாஸ்திரி என்ற பட்டம் பெற்றிருந்த லால்பகதூர், இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்று பல ஆண்டுகள் சிறையில் கழித்தவர். நேரு மந்திரி சபையில் பல மந்திரி பதவிகளை வகித்திருந்து, தாமாகப் பதவியை விட்டார். சமீபத்தில் தான் இவருக்கு 61 வயது பூர்த்தியாயிற்று.

இந்த அரசில் இப்போது ஆள் பஞ்சம். நிதானம் தவறாது நேர்மையும் பண்பும் திறனும் வாய்ந்த தலைவர்கள் பஞ்சம். இந்த நிலையில் இவரை இழந்தது தேசத்தின் துர்ப்பாக்கியம். ஆண்டவன் இவருடைய ஆன்மா சாந்தி பெற அருள் செய்து, இந்திய நாடும் நல்ல பாதையில் விவேகத்துடன் ஓங்கி வளரவும் அருள் பாலிப்பானாக.

12—2—'66, 13—2—66 சனி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டமும் பொதுக்குழுக் கூட்டமும் அலுவலகத்தில் நிகழும். சட்டத் திருத்தமும் பிறவும் முடிவுசெய்யப் பெறும். உறுப்பினர்கள் யாவரும் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

சைவ சித்தாந்தம்-ஆங்கில முத்திங்கள் பத்திரிகை

நமது சமாஜம் வெளியிடும் ஆங்கில முத்திங்கள் பத்திரிகை, "சைவசித்தாந்தம்" சிதம்பரத்தில் நடந்த வைர விழாவில் 31—12—65-ல் வெளிவந்தது. பத்திரிகை நல்ல முறையில் அமைந்துள்ளது. அருமையான கட்டுரைகள் பதினைந்துக்குக் குறையாமல் அடங்கியுள்ளன. கட்டுரை எழுதியவர்கள் யாவரும் கற்றறிந்த பெருமக்கள் ஆவர். பத்திரிகைக்குக் கையொப்பம் செலுத்தியும், விளம்பரம் தந்தும், மதிப்புரைக்கு நூல்கள் அனுப்பியும், தக்க கட்டுரைகள் வழங்கியும், நன்கொடைகள் தந்தும் ஆதரவு தருமாறு வேண்டப்படுகிறது. திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளை நடாத்திய 'சித்தாந்ததீபிகை' 1914-ல் நின்றபின் இதுவரை ஆங்கிலத்தில் சைவசித்தாந்தத்தை விளக்க ஒரு பத்திரிகையை நடத்த செல்வமும் வசதிகளும் பெற்ற ஒருதரத்தாலும் ஏற்பாடுசெய்யவில்லை. நம் சமாஜம் இநத மகத்தான பணியை ஏற்றுள்ளது. அது இறைவனருளாலும், சைவர்களின் உழைப்பாலும் வெற்றிபெறுக! இன்றே சந்தாதாரராகச் சேருங்கள் சந்தா ரூ 5-00. —நல். மு.

இவ்வாண்டு இதுகாறும் ஆயுள் உறுப்பினர் ஆகியோர் விவரம் வருமாறு :-

1. டாக்டர் K. ரங்கசாமி, மயூரா க்ளினிக், முருக பிள்ளை தெரு, சிதம்பரம்.

2. டாக்டர் M. நடராசன், 1/3 லாண்டன்ஸ் ரோடு, சென்னை-10.

3. V. மருதவாணம் பிள்ளை, பின்னலூர் P. O., சிதம்பரம் தாலுகா.

4. A. முத்துக்குமரசாமி முதலியார், 4. புதுப் பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம்.

5. A. நடேசமுதலியார், 37/38 புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம்,

P. O., சிதம்பரம் தாலுக்கா.

7. ச. சிவகுமாரன், 192. லாயிட்ஸ் ரோடு, சென்னை-14.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் மூன்றை விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். வி. பி பி. யில் அடுத்த மாத இதழை அனுப்புவதாயின் 75 புதுக்காசுகள் வீணாக அதிகம் செலுத்த வேண்டியிருக்கும், மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முழு விலாசம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்றுத் தங்கள் சந்தாத் தொகையினைத் தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. சிவநேசன் அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். சந்தா அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12. கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4.

தை மாத விசேட தினங்கள்

3	(16—1—66)	திருநீலகண்ட நாயனார் விழா
,,		தாயுமானவர் விழா
11	(24—1—66)	அப்பூதியடிகள் விழா
14	(27—1—66)	கலிக்கம்பநாயனார் விழா
19	(1—2—66)	கண்ணப்ப நாயனார் விழா
20	(2-2—66)	அரிவாட்டாயநாயனார் விழா
23	(5—2—66)	தைப்பூச விழா
26	(8—2—66)	சண்டேசுரநாயனார் விழா

பிற செய்திகள்

மதுரை சைவ சித்தாந்த சபை ஆதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் 86-வது ஆண்டு நினைவு விழா திரு G. கலியாணம் பிள்ளை அவர்கள் தலைமையில் 14—12—65 அன்று நிகழ்ந்தது. பலர் நாவலரவர்களின் பெருமை பற்றிப் பேசினர்.